நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவம் மற்றும உயிர்ப்பாதுகாப்பு முறைகள்

மருத்துவர். வி.ராமகிருஷ்ணன்
உதவிப் பேராசிரியர்
கால்நடை மருத்துவ் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
திண்டுக்கல் 624 004

"வேர் பாரு- மிஞ்சினகால்
மெள்ள மெள்ள
பர்ப்பம் செந்தூரம் பாரு"

என்ற சித்தர் வாக்கின் அடிப்படையில் நம் முன்னோர் மூலிகை மருத்துவத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். தங்கள் அருகாமையில் உள்ள இலை தழைகளை ஆய்ந்தறிந்து அவற்றின் பயன்பாட்டை உணர்ந்து, பல்வேறு நோய்களுக்கு அவற்றைப் பயன்படுத்தி வெற்றிகரமாக மருத்துவம் பார்த்திருக்கிறார்கள். இலை தழைகளைப் பயன்படுத்துவது முதல்கட்ட முதலுதவி சிகிச்சை. அதில் குணமடையவில்லையென்றால், நோயின் தீவிரத்தை உணர்ந்து அடுத்தக்கட்ட சிகிச்சையாக மூலிகை மற்றும் பல்வேறு கூட்டுப்பொருட்கள் சேர்த்துப் புடம் போடப்பட்ட பர்ப்பம், செந்தூரம் ஆகியவற்றைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தமிழர்கள் பன்னெடுங்காலமாகவே மரபு சார் மூலிகை மருத்துவத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். மரபு வழி மருத்துவம் என்பது நம்பிக்கை, அறிவு, அனுபவம் மற்றும் நுட்பங்கள் அடங்கியவையாகும். மரபு சார் மூலிகை மருத்துவமானது குணமடையும் திறன் மற்றும் குறைந்த செலவு காரணமாக அதிக அளவில் பயன்பட்டு வருகின்றது. இந்த முறையில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோயைத் தீர்க்கும் முறை ஷஎத்னோ வெடெரினரி மெடிசின்' என்றழைக்கப்படுகிறது. இது ஒரு தலைசிறந்த மருத்துவ முறையாகும். வளரும் நாடுகளில் உள்ள 80 சதவீத மக்கள் மரபு சார் மூலிகை மருத்துவத்தைப் பயன்படுத்துகின்றனர். இந்த மருத்துவத்திற்கு தேவையான மூலப் பொருட்கள் மிக எளிதாகவும், விலை குறைவாகவும் கிடைக்கக் கூடியது. அத்தோடு மட்டுமில்லாமல் ஆங்கில மருத்துவத்திற்கு ஏற்படும் மருத்துவச் செலவு, பக்க விளைவு, மருத்துவ வசதியின்மை போன்ற காரணங்களினாலும் இந்த மரபு சார் மருத்துவம் முக்கியத்துவம் பெறுகிறது.

மரபு சார் மூலிகை மருத்துவத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள்

நன்மைகள்

- பக்க விளைவுகள் கிடையாது.
- குறைந்த விலை மற்றும் எளிதாக கிடைக்கக் கூடிய மூலப் பொருட்கள்
- கால்நடைகளுக்கு மரபு சார் மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகளைப் பயன்படுத்துவது எளிது. ஏனென்றால் பெரும்பாலான மருந்துகள் வாய்வழியாகவோ அல்லது உடல் மேல் பூசக் கூடியவை.

குறைபாடுகள்

- ஒவ்வொரு முறை பயன்பாட்டிற்கும் புதிதாக மருந்துகளைத் தயாரிக்க வேண்டும்.
- நீண்ட நாட்கள் தயாரித்த மருந்துகளை கெட்டுப் போகாமல் பாதுகாக்க முடியாது.
- அதிக அளவில் மருந்துகளைத் தயாரிக்க முடியாது.

❖ ஓவ்வொரு மூலிகையும், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.
இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் வெவ்வேறு முறைகளில் மரபு சார் மூலிகை மருத்துவம் கடைபிடிக்கப்பட்டு வருவதால் ஒரு நிரந்தர முறையில் மருந்து தயாரித்தல் மற்றும் பயன்படுத்துதல் கிடையாது.

நாட்டுக்கோழிகளை தாக்கும் சில நோய்களுக்கான முதலுதவி மரபுவழி மூலிகை மருத்துவ முறைகள்

வ. எண்	நோய் நிலை	முதலுதவி மரபுவழி மூலிகை மருத்துவம்
1	**வெள்ளைக் கழிச்சல் நோய் (ராணிக்கெட்)** வெள்ளைக் கழிச்சல் நோய் கோழியினங்ளை தாக்கி மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நச்சுயிரி நோயாகும். கழிச்சல் வெள்ளையாகவோ அல்லது பச்சையாகவோ இருக்கும். நோய் கண்ட கோழிகளில் தலைச்சுற்றுதல், இறக்கைகளில் தளர்வு காணப்படும	நோய் கண்ட நிலையில் கீழ்கண்ட மூலிகை மருத்துவம் பயன்படுத்தலாம். ***10 கோழிகளுக்கு தேவைப்படும் மூலிகை*** சின்ன சீரகம் - 10 கிராம் கீழா நெல்லி - 50 கிராம் (ஒரு கைப்பிடி) ஒரு மணிக்கு ஒருமுறை தொடர்ந்து மருந்து அளிக்க வேண்டும். ***சிகிச்சை முறை*** வாய் வழியாக சீரகம் மற்றும் கீழா நெல்லியை இடித்து பின்பு இக்கலவையை தீவனம் அல்லது அரிசி குருணையில் கலந்து கொடுக்கவும். மிகவும் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு மிளகு அளவுள்ள உருண்டைகளாக உட்செலுத்த வேண்டும். தொடர்ந்து 3 முதல் 5 நாட்கள் கொடுக்க வேண்டும்.
2	**கோழி அம்மை நோய்** கோழி அம்மை நோய் கோழியினங்களை தாக்கும் ஒரு நச்சுயிரி நோயாகும். இந்நோயை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பு மருந்துகள் பயன்படுத்த வேண்டும். நோய் கண்ட நிலையில் மூலிகை முதலுதவி மருத்துவம் நல்ல பயன் தரும்.	***வாய் வழியாக சிகிச்சை முறை*** சின்ன சீரகம் - 10 கிராம் மஞ்சள் - 5 கிராம் மிளகு - 5 கிராம் பூண்டு - 5 பல் வேப்பிலை - 10 எண்ணம் துளசி - 10 எண்ணம் ***சிகிச்சை முறை*** மிளகினை இடித்து மற்ற பொருட்களோடு கலந்து அரைத்து இக்கலவையை தீவனம் அல்லது அரிசி குருணையில் கலந்து கொடுக்கவும். மிகவும் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு சிறு சிறு உருண்டைகளாக உள்ளே செலுத்த வேண்டும். ***அம்மை கண்ட கோழிகளுக்கு வெளிப்பூச்சு மருந்து*** பூண்டு - 10 கிராம் துளசி இலை - 50 கிராம் வேம்பு இலை - 50 கிராம் மஞ்சள் தூள் - 10 கிராம் சூடம் - 50 கிராம் சின்ன சீரகம் - 10 கிராம் (இடித்துசலித்தது)

		சிகிச்சை முறை மேற்கண்ட பொருட்களை நன்கு அரைத்து அக்கலவையுடன் விளக்கெண்ணைய் 100 மில்லி மற்றும் வேப்ப எண்ணெய் 100 மில்லி சம அளவில் கலந்து சிறிது சூடு காட்டி பாதிக்கப்பட்ட இடங்களில் பூச வேண்டும்.
3	**சுவாச நோய் தொற்றுகள்**	**முற்காப்பு சிகிச்சை:** மஞ்சள் 150 கிராம்/75 கிலோ தீவனம் துளசி 10 கிராம் /75 கிலோ தீவனம் **நோய் கண்ட நிலையில்** துளசி 40 கிராம் / 75 கிலோ தீவனம்
4	**உருளைப்புழுக்கள்**	75 கிலோ தீவனத்திற்கு, 400 கிராம் நில வேம்பு பொடி என்ற விகிதத்தில் கலந்து, இரண்டு மாதத்திற்கு, ஒரு முறை கொடுப்பதன் மூலம், உருளைப்புழு தாக்கத்தை தடுக்கலாம்
5	**நாடாப்புழுக்கள்**	ஒரு கோழிக்கு அரை கொட்டைப் பாக்கு என்ற விகிதத்தில் , இரண்டு மாதத்திற்கு, ஒரு முறை கொடுப்பதன் மூலம், நாடாப்புழுக்கள் தாக்கத்தை தடுக்கலாம்
6	**புற ஒட்டுண்ணிகள்** கோழிகளில் காணப்படும் பேண், உண்ணி முதலிய ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்துவதற்கான மூலிகை மருத்துவம்	சாம்பல் (சலித்தது) - 100 கிராம் வசம்பு பொடி - 25 கிராம் மஞ்சள் தூள் - 10 கிராம் மேற்கண்ட பொருட்களை கலந்து கோழியின் மேல் இறகுகளை விலக்கி தூவ வேண்டும்.
7	**கழிச்சல்**	**10 கோழிகளுக்கு தேவைப்படும் பொருட்கள்** சின்ன சீரகம்- 10 கிராம் கசகசா- 5 கிராம் வெந்தயம்- 5 கிராம் மிளகு - 5 எண்ணிக்கை மஞ்சள் தூள்- 5 கிராம் பெருங்காயம் - 5 கிராம் வெங்காயம் - 5 பல் பூண்டு- - 5 பல் வெங்காயம் மற்றும் பூண்டு இவற்றை நன்கு அரைத்துக் கொண்டு மற்ற பொருட்களை கருக வறுத்து இடித்துக் கொள்ள வேண்டும், இக்கலவையைத் தீவனம் அல்லது அரிசிக் குருணையில் கலந்து கொடுக்கவும்
8	**ஒரணு இரத்தக்கழிச்சல்**	சோற்று கற்றாழையின்,உட்புற பொருளின் ஒரு துண்டை, 3 முதல் 5 நாட்களுக்கு குடிநீரில் சேர்க்கப்படுவதன் மூலம் நோய் வருவதை தடுக்கலாம்.

9	**வெப்ப அயற்ச்சி**	வெப்ப அழுத்தத்தை தடுக்க கோடை காலத்தில் எலுமிச்சை சாறை குடிநீரில் கலந்து கொடுக்கலாம், அல்லது நெல்லிக்கனி பொடியை உணவு அல்லது குடிநீரில் கலந்து கொடுக்கலாம்,.
10	**உடல் வளர்ச்சியை மேம்படுத்த**	75 கிலோ தீவனத்திற்கு 75 கிராம் மஞ்சள் தூள் என்ற விகிதத்தில் கலந்து கொடுப்பதன் மூலம், நாட்டு கோழிகளில் உடல் வளர்ச்சியை மேம்படுத்தமுடியும்
11	**இனப்பெருக்க திறனை மேம்படுத்த**	சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட ஒரு பல் பூண்டை, இனப்பெருக்க காலங்களில், தீவனத்தில் சேர்ப்பதன் மூலம், இனப்பெருக்க திறனை மேம்படுத்தலாம்
12	**சுகாதாரமற்ற சூழல்**	5 வசம்பு குச்சிகளை இரவு முழுதும் தண்ணீரில் ஊற வைத்து, நன்றாக அரைத்து அவற்றை, 5 லிட்டர் நீரில் கரைத்து, கொட்டகைக்குள் தெளிக்க வேண்டும், இது ஒரு பொது கிருமிநாசினியாக செயல்படும்.
13	**"ஈ" தொல்லையை கட்டுப்படுத்த**	30 மில்லி லிட்டர் வேப்ப எண்ணெயை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து, கொட்டகைகளில் தெளிப்பதன் மூலம் ஈ தொல்லையை கட்டுப்படுத்தலாம்

பண்ணையாளர்களின் கவனத்திற்கு

- 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் சீரகம் (இடித்து) வீதம் கலந்து கொதிக்க வைத்து ஆறிய பின் கோழிகளுக்கு இந் நீரை வாரம் 2 முறை கொடுப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கலாம்.
- நாட்டுக் கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய்க்கான தடுப்பு மருந்தை கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் படி தவறாமல் அளிக்க வேண்டும்.
- நாட்டுக் கோழிகளுக்கு பசுந்தீவனமாக புல் வகைகள் (கோ-4, வேலிமசால், முருங்கை, அகத்தி, வேம்பு, கீரைகள் போன்றவற்றை அளிக்க வேண்டும்.

நாட்டுக் கோழி பண்ணைகளில் உயிர்ப்பாதுகாப்பு முறைகள்

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்."

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, உயிர்ப்பாதுகாப்பு முறை என்பது, நோய் வந்த பிறகு நோயைக் கட்டுப்படுத்துவதை விட நோய் வராமல் காப்பதே சாலச்சிறந்தது.

முன்னுரை

நாட்டுக் கோழி பண்ணைகளில் உயிர்ப்பாதுகாப்பு முறைகள் என்பது, சுற்றுப்புற நோய் கிருமிகளிலிருந்து கோழிகளை பாதுகாத்தல் மற்றும் நோய்கள் பரவுவதை தடுக்கும் முறையாகும். இது மட்டுமல்லாமல், நோய்க் கிருமிகள், ஒரு பண்ணையிலிருந்து, மற்றொரு பண்ணைக்கோ அல்லது கோழிகளுக்கு இடையேவும் பரவாமல் தடுத்தல் என்பதையும் குறிக்கும். மொத்தத்தில், உயிர் பாதுகாப்பு என்பது, நோய்கிருமிகளின் பரவல் மற்றும் அதன் தாக்கததை பல்வேறு வழிகளில் தவிர்க்கும் மற்றும் கட்டுப்படுத்தும் பல வழிகளை உள்ளடக்கியதாகும். உயிர் பாதுகாப்பு என்பது கிருமிநாசினியை மட்டும் பயன்படுத்தி நோய்க்கிருமிகளை அழிப்பது அல்ல. கோழி பண்ணைகளுக்கிடையே நோய் கிருமிகள் பரவுவதை தடுக்கும் முறையாகும். சிறந்த

நோய் தடுப்பு முறை என்பது நோய் கிருமிகளின் வாழ்கை சுழற்சி, மற்றும் அதன் பரவும் முறையை அறிந்து கிருமி நாசினியை பயன்படுத்துவது, தடுப்பூசி போடுதல் மருத்துவம் மற்றும் சிறந்த பராமரிப்பு முறையை சார்ந்துள்ளது. இதனை மனதில் கொண்டு செயல்பட்டால் கோழிபண்ணைகளுக்கிடையே நோய் கிருமிகள் பரவுதலை தடுக்க முடியும். உயிர் பாதுகாப்பு என்பது அதன் அடிப்படை தன்மையைக் கொண்டு பல அம்சங்களாக உள்ளது.

1. நாட்டுக்கோழிப ் பண்னை இடம் தேர்வு செய்தல்:

- கோழிப்பண்ணைக்கான இடத்தை தேர்வு செய்யும் போது , அந்த இடம் அதற்க்கு முன்பு கோழிப்பண்ணை அமைந்த இடமாக இருக்கக்கூடாது. கோழிப்பண்னையினை மற்ற கோழிப்பண்ணைகள் மற்றும் தொழிற்நிறுவனங்களில் இருந்து விலக்கி தகுந்த இடம் விட்டு அமைக்க வேண்டும்.
- கோழிப்பண்னையினை எலி, பறவைகள் மற்றும் விலங்குகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் அதற்க்கான அமைப்பு ஏற்படுத்தவேண்டும். கோழிப்பண்ணையினை சுற்றி முழவதுமாக வேலி அமைக்கப்படவேண்டும்.
- கோழி வளர்ப்புக் கூடங்களுக்கிடையே தகுந்த இடைவெளி விடவேண்டும். இளங் கோழிகுஞ்சுகள், வளர்கோழிகள், மற்றும் முட்டை கோழிகளை அதற்கென ஒதுக்கப்பட்ட பண்ணை வீடுகளில் தனித்தனியாக வளர்க்கப்படவேண்டும்.

2. உபகரணங்கள் மற்றும் பண்ணை வாகனங்கள்:

- கோழிப் பண்ணைகளில் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களும் கிருமி நாசினி கொண்டு தூய்மைபடுத்தி கழுவவேண்டும்.
- முட்டை தட்டை பண்ணை வீட்டிற்க்குள் எடுத்து செல்லும் முன் சுத்தப்படுத்த வேண்டும்.
- அலகு வெட்டும் கருவி, தடுப்பூசி போடும் கருவி மற்றும் மற்ற உபகரணங்களை பயன்படுத்தப்படும் முன் கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்ய வேண்டும்.
- வெளியில் இருந்து வரும் வாகனங்களை பண்ணையின் தலைமை அதிகாரியின் அனுமதி இல்லாமல் பண்ணைக்குள் நுழைய அனுமதிக்ககூடாது.
- இறந்த கோழிகளை எடுத்துச் செல்ல பயன்படுத்தபடும் வாகனங்களை பண்ணைக்குள் அனுமதிக்க கூடாது.
- பண்ணை பணிக்காக பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களையும் பண்ணைக்குள் அனுமதிக்கும முன் முறையான கிருமிநாசினி கொண்டு தூய்மை படுத்தப்பட்டு அனுமதிக்க வேண்டும்.

3. தடுப்பு வழிகள்

- புதிதாக பண்ணைகளுக்கு கோழிகள் கொண்டு வரும் போது அவற்றை நன்கு கவனித்து, தேவையான சோதனைகள் செய்து, நோய்த்தாக்கம் ஏதேனும் உள்ளதா என்று அறிய வேண்டும்.
- கோழிகளின் உணவு உட்கொள்ளும் திறன் , முட்டை உற்பத்தி மற்றும் இறப்பு விகிதம் ஆகியவற்றை ஒவ்வொரு நாளும் கணக்கிட வேண்டும்.
- கோழி பண்னையை தினசரி பார்வையிட்டு கோழிகளில் தென்படும் மாற்றங்கள் மற்றும் நோய்க்கான அறிகுறிகளை அவ்வப்போது பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
- புதியதாக வாங்கப்படும் முட்டை கோழிகளில் நோய்கான காரணிகள் உள்ளதா என்பதனை சோதித்து பார்க்க வேண்டும்.
- தடுப்பூசி போடுதல், மற்றும் நோய் தடுக்கும் முறைகள் கையாளுதல் ஆகியவற்றை கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் படி கடைபிடிக்க வேண்டும்.

- நோயின் தன்மையை ஆராய்ந்து அந்த நோய்க்கான தடுப்பூசிகள் போடவேண்டும்.
- தடுப்பூசி போடும் போது பயன்படுத்த படும் தடுப்பூசியின் பெயர், தரவரிசை எண், அதன் ஆயுட்காலம், தடுப்பூசி போட்டவரின் பெயர், ஆகியவற்றை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
- இறந்த கோழிகளை அவ்வப்போது சோதித்து பார்த்து கோழி இறந்ததற்கான காரணத்தை அறிய வேண்டும்.
- இறந்த கோழிகளை ஒரு பண்னைகளில் இருந்து மற்ற பண்னைகளுக்கு எடுத்து செல்ல கூடாது.
- வெவ்வேறு வயது கோழிகளை ஒரே பண்ணை வீட்டில் வளர்க்க கூடாது.

4. மனிதர்கள் நடமாட்டம்

- பண்ணைக்கு தேவையில்லாத பார்வையாளர்கள் வருகையை தவிர்க வேண்டும்
- பண்ணையை பார்வையிட வரும் பார்வையாளர்களுக்கென தூய்மையான கிருமி நீக்கம் செய்யப்பட்ட காலனிகள் கொடுக்கப்பட வேண்டும்.
- பண்ணையை பார்வையிட வரும் பார்வையாளர்கள் தினசரி பதிவேட்டில் அவர்களின் பெயர், முகவரி மற்றும் கையெழுத்து ஆகியவற்றை பதிவு செய்த பின் பண்ணைக்குள் அனுமதிக்கபட வேண்டும்.
- பார்வையாளர்கள் அவர்களாகவே பண்ணைக்குள் நுழைவதையும், புதியாட்கள் பண்ணைக்குள் அனுமதி இல்லாமல் நுழைவதையும் அனுமதிக்க கூடாது.
- பண்ணை உரிமையாளர் அல்லது தலைமை அதிகாரியின் அனுமதி அல்லாமல் வேலையாட்கள் மற்ற பண்ணைகளுக்கு செல்லக்கூடாது.
- வேலையாட்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமே வேலை பார்க்க வேண்டும். அவர்கள் பண்னையின் மற்ற பகுதீகளுக்கு செல்ல அனுமதிக்ககூடாது.
- குறிப்பாக கோழிகளை தாக்கும் நோய்கள் பற்றியும் அது பரவும் விதம் மற்றும் அதனை தடுக்கும் முறைகளை வேலையாட்களுக்கு சொல்லித்தர வேண்டும்.

உயிர் பாதுகாப்பின் வழி முறைகள்

கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யும் முறைகள்

- கோழி பண்ணைகளில் பயன்படுத்திய தீவனத்தட்டு, தண்ணீர் தட்டுகளை சலவை சோடா கொண்டு கழுவி பின் தேவைப்பட்டால் வைரஸ் நச்சு கொல்லி மருந்து நீரில் மூழ்கி எடுக்க வேண்டும். பின் அதனை சூரிய வெப்பத்தில் உலர வைக்க வேண்டும்.
- ஆழ்கூள தள முறையில் பயன்படுத்தபடும் தளப்பொருட்களை 10 சதவிகித பார்மொலின் தெளித்த பின் அதனை முறையாக பண்ணையில் இருந்து அப்புறப்படுத்தவேண்டும்.
- பண்ணையின் தண்ணீர் குழாய்களை சுத்தம் செய்ய 10 சதவிகித சோடியம் ஹைட்ரோகுளோரைடை குழாய்களுக்குள் ஒருநாள் இரவு முழவதும் தேங்க வைத்து பின் தூய்மையான நீரினை கொண்டு கழுவ வேண்டும்.
- ஏதேனும் முந்தைய நோய் தாக்கத்தின் அறிகுறிகள் காணப்பட்டிருந்தால் அந்த அறையின் தரையை சலவை சோடாவை சதுர அடிக்கு, லிட்டருக்கு 15 கிராம் என்ற விகிதத்தில் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்
- 100 கன அடி அளவிற்கு 40 மில்லி பார்மெலின் மற்றும் 20 கிராம் பொட்டாசியம் பெருமாங்கனேட் அளவுகளில் கலந்து புகைமூட்டம் செய்யலாம்.

- பண்னை வீடுகள் தூய்மை படுத்தப்பட்டும், கிருமிநாசினி செய்தும் 15 நாட்கள் வரை காலி இடமாக இருக்க வேண்டும்.
- ஈ மற்றும் கொசுக்களை கட்டுப்படுத்த சிறந்த பூச்சி கொல்லி மருந்தை பயன்படுத்த வேண்டும்.
- கோழித்தீவனங்கள், எலி மற்றும் பெருச்சாளி போன்றவை உண்பதற்கு ஏற்ற இடத்தில் இருக்கக்கூடாது.
- கோழிப்பண்ணையின் அனைத்து இடத்திலும் நன்கு கம்பி வலை கொண்டு அடைக்கப்பட்டு எலிகள் உட்புகாதவாறு இருக்க வேண்டும்.
- பண்னை முழுதும் நன்கு கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும்.
- எலிப்பொறி மற்றும் நவீன எலி அழிப்பபான்கள் கொண்டு எலிகளை அழிக்கலாம்.

தடுப்பூசி மூலம் உயிர் பாதுகாப்பு

தடுப்பூசி என்பது கோழிகளை பரவலாக தாக்குகின்ற நோய்களிலிருந்து பாதுகாக்கும் முறையாகும். நோய் தடுப்பூசிகளை குஞ்சு பொரிப்பக பரிந்துரை மற்றும் பண்ணைதொழில்நுட்ப வல்லுனரின் பரிந்துரையின் பேரில் ஒவ்வொரு பண்ணைக்கும் ஏற்ற "நோய் தடுப்பூசி அட்டவனையை" உருவாக்கி அதன்படி செயல்படுதல் மிக அவசியம். ஒரே பண்ணையில் வெவ்வேறு வயதுடைய கோழிகளை வளர்க்கும் பொழுது கவனமாக தடுப்பூசி திட்டங்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

1. குறிப்பிட்ட பகுதியில் அல்லது பண்ணையின் அனுபவ அடிப்படையில் பண்ணையில் அடிக்கடி ஏற்படும் நோய்களை மனதில் கொண்டு நோய் தடுப்பூசி அட்டவண தயார் செய்ய வேண்டும்.
2. நமது பண்ணையில் உள்ள நோய்களின் தன்மை மற்றும் அருகாமையில் உள்ள பண்ணைகளில் காணப்படும் நோய்களின் தன்மை ஆகியவற்றை பொருத்து தடுப்பூசி கொடுக்கப்படவேண்டும்.
3. கோழிகள் சுவாசமண்டலம் சம்பந்தமான நோய்கள் அல்லது ஒட்டுண்ணி நோய்களால் தாக்கப்பட்டிருக்கும் பொழுது தடுப்பூசி போடுவதை தவிர்க்க வேண்டும்.
4. இறைச்சிக்கோழி இனங்களுக்கு ஒன்று அல்லது இரண்டு தடுப்பூசிகள் போதுமானது, ஆனால் முட்டை கோழிகள் மற்றும் இனப்பெருக்க கோழிகளின் உற்பத்திக் காலம் அதிகமாக இருப்பதால் தடுப்பூசிகளின் தேவையும் அதிகமாகிறது.
5. முட்டையிட தயாராக இருக்கும் இளங்கோழிகளை வாங்கும்பொழுது, அவைகளுக்கு மூன்று வாரத்திற்கு முன்னதாகவே அனைத்து தடுப்பூசிகளும் போட்டிருக்கின்றனவா என உறுதிசெய்துகொள்ள வேண்டும்.
6. தடுப்பூசி உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டிருக்கும் உபயோக முறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்
7. தடுப்பூசி உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டால் மட்டும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடுப்பூசி மருந்துகளை கலந்து கொடுக்கப்பட வேண்டும்.
8. உற்பத்தியாளர்களின் அறிவுரையின்படி தடுப்பூசி மருந்துகளை பாதுகாப்பாக வைக்கவேண்டும்.
9. தடுப்பூசி போடப்படும் நாளில் தண்ணீரில் தடுப்பூசி மருந்து கலந்து கொடுக்கும் பொழுது அதே தண்ணீரில் மற்ற எந்த மருந்துகளையும் பயன்படுத்த கூடாது
10. பல தடுப்பூசிகளை ஒருசேர பயன்படுத்தும்பொழுது கோழிகளுக்கு சோர்வு அதிகரிக்க கூடும். அந்த சமயங்களில் சோர்வு நீக்க மருந்துகாளான வைட்டமின் அல்லது வைட்டமின் பி காம்ளெக்ஸ் போன்ற மருந்துகளை கொடுப்பது நல்லது.

இறந்த கோழிகளை அகற்றுதல்:

- ❖ இறந்த கோழிகளை உடனடியாக புதைப்பதும் அல்லது எரிப்பதும் நோய் பரவுதலை தடுக்கும் முறைகளில் மிக முக்கியமான ஒன்று.
- ❖ செயற்கை முறை எரிப்பானை பயன்படுத்தி இறந்த கோழிகள் எரிக்கப்பட வேண்டும். 10000 முட்டை கோழிகளை கொண்ட பண்னைக்கு 6 அடி விட்டம் 6 அடி ஆழம் கொண்டு புதைக்கும் குழி போதுமானது.